NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu,* p3
**Date:** 22 September 2018

# புதிய கல்விக்கழகம் தொடக்கம்

வட்டார சுகாதாரப் பராமரிப்பு ஒத்துழைப்பைப் பேணுவதற்காக புதிய கல்விக்கழகம் ஒன்று நேற்று தொடங்கப்பட்டது. ‘சிங்ஹெல்த் டியூக்–என்யுஎஸ் குளோபல் ஹெல்த்’ எனப்படும் அக்கழகம் ஆராய்ச்சி, கொள்கை மேம்பாடு, கல்வி போன்ற அம்சங்களில் வெளிநாட்டு விஞ்ஞானிகளுடனும் அரசாங் கங்களுடனும் ஒத்துழைப்பைப் பேணும். வெளியுறவு அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் இதனை நேற்று தொடங்கி வைத்தார். தொற்றுநோய்கள் புதிது புதிதாக உருவெடுப்பது பற்றிய நமது ஆராய்ச்சியைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டி உள்ளது என்று பேராசிரியர் மைக்கல் மெர்சன் கூறினார். புதிய கல்விக்கழகத்தை நிர்வகிப்போரில் இவரும் ஒருவர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.